[24th April 1959

Sri T. K. SUBBIAH : பேஸிக் ட்ரெயினிங்குக்காக தேவஸ்தான நிலத்தைக் குத்தகைக்கு கொடுத்தால், அது எடுத்துக் கொள்ளப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பேஸிக் பி.டி. காலேஜ் ஒரத்த நாட்டில் இருக்கிறது. பக்கத்திலே தேவஸ்தான பூமி இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

C.M.S. Hospital, Vellore

*139 Q.—**Sri A. A. RASHEED (on behalf of Sri S. M. ANNAMALAI) :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரிலுள்ள சி.எம்.எஸ். ஆஸ்பத்திரிக்கு 1956, 1957, 1958-ம் ஆண்டுகளில் சர்க்கார் மானியமாகவும் கடனாகவும் கொடுத்தத் தொகை எவ்வளவு ?

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு இனமாக வைத்திய உதவியளிக்கப்படும் ஏழைகள் எத்தனை பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) Rs. 20,000 per year as grant.

(b) 25,145 in-patients and 206,014 out-potients per year on an average.

Sri A. A. RASHEED : Sir, is it a fact that patients from one particular community are treated free in the hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU : No. This big number is supposed to have been treated free. These are all free.

Sri K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware that persons belonging to one religion are being treated free of charge without any consideration to their economic status?

The Hon. Sri M. A. MANICKAVELU : If any people are treated free based on economic considerations, we are not concerned with that. We are giving a certain amount as grant. We give Rs. 20,000 as grant. Two lakhs of patients are treated free in the hospital.

Sri T. VELUCHAMI : கிறிஸ்துவ மடாதிபதிகள் இம்மாதிரி இலவச ஆஸ்பத்திரிகள் நடத்துவதுபோல் ஹிந்து மடாதிபதிகள் யாராவது நடத்துகிறார்களா ? அல்லது, அவர்களைத் தூண்டுவதற்கோ வற்புறுத்துவதற்கோ ஹிந்து தர்ம பரிபாலன போர்டு சட்டத்தில் ஏதாவது ஒரு அம்சம் இருக்கிறதா ?

Mr. SPEAKER : மூலக் கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லையே. அமைச்சர் பதிலளிப்பதாக இருந்தால் அளிக்கலாம்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ராமகிருஷ்ண மிஷன் இம் மாதிரியாக இலவச வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்கிறது.

Sri P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, வேலூர் ஆஸ்பத்திரியானது நமது ராஜ்யத்திலே சிறந்த ஒரு ஆஸ்பத்திரியாக இருப்பதால், அதற்குக் கொடுத்து வரும் மான்யத் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் யோசிப்பார்களா ?

24th April 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : நாமும் கொடுத்து வருகிறோம். அவர்களுக்கும் நிறையப் பணம் வெளியிலே யிருந்து வருகிறது. அத்துடன், ரொம்பப் பணக்காரர்கள் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வருகிறார்கள். அவர்களிடமிருந்தும் நிறைய கட்டணம் வசூல் செய்து கொள்கிறார்கள்.

SRI J. MATHA GOWDER : மருந்து வாங்குவதற்காக கொடுக்கக்கூடிய மான்யத்திலே பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்ன கொடுத்தார்களோ அதையே கொடுத்து வருகிறோம். அன்றைக்கிருந்த விலைக்கும் இன்றைக் கிருக்கும் விலைக்கும் மாறுதல் இருக்கிறது. பல மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. ஆகையால் மான்யத் தொகையின் அளவை உயர்த்திக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் பொதுவாக ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கிற மான்யத்தைப்பற்றி பேசுகிறார். மூலக் கேள்வி குறிப்பாக வேலூரிலே இருக்கும் மிஷன் ஆஸ்பத்திரியைப்பற்றியது. முன்பு அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வந்தோம். இப்போழுது வருஷத்திற்கு இருபதாயிரம் ரூபாய் கொடுக்கிறோம்.

SRI R. SRINIVASA IYER : Sir, is any grant being given to Sri Ramakrishna Mutt by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. On the usual pattern, they are also given.

Railway Employees' Co-operative Bank, Madras

* 140 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any complaint was received by the Registrar of Co-operative Societies from some of the share-holders containing some allegations against some of the Directors of the Railway Employees' Co-operative Bank, Madras-3 ; and

(*b*) what are the allegations and what is the action taken by the Registrar?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The allegations generally relate to the misuse of the funds of the bank. Some of them have been enquired into and found to be baseless. Others are under investigation.

Sinking of wells in Harijan Colonies

* 141 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of SRI A. GOVINDASAMY) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1955–56, 1956–57, 1957–58-ல் (1) சென்னை ராஜ்யம், (2) தென்னாற்காடு ஜில்லா, (3) விழுப்புரம் தாலுகா இவைகளிலுள்ள சேரிகளில் எத்தனை கிணறுகள் வெட்டப்பட்டன ?